உ
சிவமயம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



கோண்டாவில் மேற்கு

கலட்டி ஒழுங்கை வாசரான

அமரர்

# திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை

(சாவகச்சேரிச் சின்னத்துரை)

அவர்கள்

அமரத்துவமெய்தி

நற்பேறு அடைந்த

வாழ்வுப் பரியந்தம் குறித்த

# நினைவு மலர்

★
★★

2001

050
னைவு

பொதுசன நூலகம்
13 OCT 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

தென்மறவராட்சி
ஜாவகர்ச்சேரி வணிக நகரின்
மானம்புலத்தில்
உயர்சைவ வேளாண்குல மரபில் வந்துதித்த
உயர்திரு. முத்ததம்பி வேலுப்பிள்ளை அவர்கள்
இராஜம்மாவை இல்லறத் துணைவியாகக் கொண்டதன்
தவப்பயனாய் வந்துதித்த
கனிஷ்ட புத்திரனும்
வலிகாமம் முக்கந்தர் நா. சின்னத்தம்பி அவர்களின்
பரம்பரையைச் சேர்ந்த
கோண்டாவில் மேற்கு திருவன்புலத்தில்
உயர்சைவ வேளாண்குல மரபில் வந்த
திரு. திருமதி துரைராஜா ஆச்சிமுத்து
தம்பதியினரின்
சிரேஷ்ட மருமகனும்
அமரர் சரஸ்வதி (பூபதி) அவர்களின்
ஆருயிர்க் கணவனுமாகிய

# திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

★
★★

25-11-2001

27991 P.C.C

மெத்தப்படித்து மேடையிலே மேட்டிமையாய் பேசுவதும்
சத்தம் போட்டு சகத்தையெல்லாம் தாமே திருத்தக்
கிளம்புவதும்
புத்தம் புதிய மதமாக்கி புவியையமாற்றப் புகுவதுவும்
கத்துக்குட்டி வேலையென்றே கண்டேன் என்னைக்
கண்டதுமே !!!

— ஞானமாலையிலிருந்து

உ

சிவமயம்

இயற்கையின்
படைப்பில்

1924-03-02



இறைவனின்
அழைப்பில்

2001-10-24

# அமரர் திரு வேலுப்பிள்ளை சின்னத்துரை
## அவர்கள்

திதி வெண்பா

ஆண்டு விஷீவாகும் ஐப்பசிமா தத்தில்வரும்
பூண்ட வளர்பிறையின் அட்டமியாம் - ஆண்டவன்தாள்
மன்னு கதியென்று வையத்தை நீத்தெங்கள்
சின்னத் துரைசெல் தினம்

+D 050

அரசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# தோத்திரத் திரட்டு

## விநாயகர் வணக்கம்

செந்திருவை சேரலாம் செந்தமிழைப் பாடலாம்
இந்திரனை போல் வாழ்ந் திருக்கலாம்
சுந்தரம் சேர் வெற்பகத்தை ஊடறுத்து
வேலவர்க்கு முன்பிறந்த கற்பகத்தை கைதொழுதெக்கால்

## தேவாரம்

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார் தம் மனதிற்கோர் வித்துமானாய்
மன்னனாய் மன்னவற்கோரமுதம் ஆனாய்
மறைநான்கும் மானாய் ஆறங்கம் மானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானாய் என்னானாய் எண்ணி நல்காய்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாயசிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு, பற்றுஒன்று இன்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு, காமவான் சுறாவின் வாய்ப்பட்டு,

இனிஎன்னே உய்யும் ஆறு என்றென்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்து கிடக்கின்றேனை
முனைவனே! முதல் அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய், மூர்க்கனேற்கே!

## திருவிசைப்பா

தத்தையங் கனையர் தங்கள் மேல்வைத்த
தயாவை நூறாயிரங் கூறிட்டு
அத்திலங்கு ஒரு கூறு உன்கண் வைத்தவருக்கு
அமருலகு அளிக்கும் நின்பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல்வைத்த கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாயாணு மாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி

## திருப்புகழ்

உலகபசு பாசதொந்த மதுவான
உறவு கிளைதாயர் தந்தை மனைபாலர்
மலசல சுவாசசஞ்ச லமதாலென்
மதி நிலைகெடாமலுன்ற னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை யணிசேயே
சரவணபவா முகுந்தன் மருகோனே
பலகலை சிவாகமங்கள் பயில்வோனே
பழநிமலை வாழவந்த பெமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

# சீனதுரையின் சிந்தனைகளும்
## ( கொன்வூஸியசின் கோட்பாடும் )
# சின்னத்துரையின் வாழ்வு முறையும்

உலகில் குடும்பம், வாழ்க்கை என்ற பதங்கள் இரண்டும் மிகவும் ஸ்தூலமயப்படுத்தப்பட்ட வடிவில் பின்பற்றப்படுவதனைக் காண்கின்றோம். தனியாள், குடும்பம், வாழ்வு என்பன ஒன்றுடன் ஒன்று மிகநெருங்கிய தொடர்பு அலகுகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும் அவற்றின் வடிவம் எப்போதும் ஸ்தூலமாக வெளித்தெரிவதில்லை ஒரு தனிமனிதனுடைய வாழ்வு எப்போது பிரகாசிக்கின்றது என்பதும் ஒரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாக எப்போது சிறக்கின்றது என்பதும், வாழ்வு பொருளுள்ள - சமூகப்பயன்பாடுடைய ஓர் ஒழுக்கமுறையாக எப்போது மாற்றப்படுகின்றது என்பதும் அந்தந்தச் சமூகவிழுமியங்களையும், அச் சமூகம் சார்ந்துள்ள கண்ணியத்தன்மையையும் பொறுத்தே காணப்படுகின்றது. இவற்றைப்பற்றியெல்லாம் சீன அறிஞரான கொன்வூஸியசும் அவரது மாணாக்கருமான மென்சியசும் மிகவிரிவாகவே போதித்திருக்கின்றார்கள். கி. மு. 6ஆம் நூற்றாண்டில் அவர்கள் இருவரும் தனியாள், குடும்பம், சமூகம், வாழ்வு பற்றியெல்லாம் அன்று போதித்திருந்த போதனைகளை அமரத்துவமடைந்த எங்கள் சின்னத்துரையின் வாழ்வுடன் ஒப்பிடும் போது அன்னாரும் கொன்வூஸியசின் ஒரு மாணவனாகவே வாழ்ந்து மறைந்து விட்டார் என்றே நினைக்கத் தோன்றுகின்றது. அந்தளவிற்கு அமரர் சின்னத்துரையவர்கள் தனது குடும்பம் என்ற ஓர் அலகை தனது கடின உழைப்பால் மேலுயர்த்தி, அதனை ஒரு பல்கலைக்கழகமாகவே ஆக்கியிருந்தார். அன்னாரது உழைப்பின் மார்க்கங்கள், தனது குடும்ப விழுதுகளை சமூகத்தின் அவையத்து முன்னே முந்தியிருக்கச் செய்த செயல்வடிவம் மற்றவர்களுடைய உழைப்பின் பயனை சுரண்டாதிருக்கும் தன்மை ஆகியவையே அமரரது ஆத்மார்த்த உணர்வலைகளாக வாழ்வு முழுவதிலும் இழையோடியிருந்தது.

அமரர் தனது கடும் உழைப்பின் மகத்துவத்திற்கான சித்தாந்தத்தை முதலில் கற்றுக்கொண்ட நிறுவனம் சாவகச்சேரி டிறிபேர்க் (Drieberg College) கல்லூரியாகும், ஆங்கில மொழி மூலக் கல்வியை அவர் அங்கு S. S. C. வரைக்கும் தொடர்ந்தி

ருந்தார். மிஷன் கல்லூரியாகையால் அங்கு மனிதாபிமானம், மற்றவர்களைச் சுரண்டாதிருக்கும் தன்மை, மற்றவர்களில் தங்கி வாழாதிருக்கும் தன்மை, கடும் உழைப்பின் மகத்துவம் போன்ற மனித வாழ்விற்கே அடிப்படையாக விளங்கும் தத்துவார்த்த சிந்தனைகளை தனது அடிப்படைக்கல்வியில் நன்கு கற்றிருந்தார். ஆங்கிலத்திலேயே கையெழுத்திடும் வழக்கமுடைய அமரர் சின்னத்துரை பின்னர் பொலிஸ் சேவையில் உள்வாங்கப்பட்டு, தொடர்ந்து ஐந்து வருடகாலமாக அப்பணிக்குரிய உள்ளகப் பயிற்சி முறைகளைக் கற்றுக்கொண்டார். அவ்வாறு கற்றுக் கொண்டிருந்த வேளையில் உயர் அதிகாரிக்கும் அன்னாருக்குமிடையே நேர்ந்த வாக்குவாதம், கைகலப்புக்காரணமாக, அன்னார் அப்பதவியையே ராஜினாமாச் செய்துவிட்டு, வாணிபத் தொழிலில் முழுமூச்சாக ஈடுபடலானார். சிறந்த வாகன ஓட்டியாகத்திகழ்ந்த அமரர் மாதம்பையிலுள்ள தனது சகோதரரின் வணிக நிலையத்திலிருந்த வண்ணம் புகையிலை வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டு அத்தொழிலில் சிறந்த தேர்ச்சியும் பெற்றார்.

பின்னர் அன்னார் கோண்டாவில் — மேற்கு, திருவன்புலக் கிராமத்தில் திரு + திருமதி துரைராஜா + ஆச்சிமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியான சரஸ்வதியை (பூபதியை) 1951ஆம் ஆண்டில் திருமணம் செய்தார் அன்னார் தனது ஆருயிர் மனைவியுடன் தனது பிறந்தகத்திலேயே வாழத் தொடங்கி, இல்லறமான நல்லறத்தைத் தொடர்ந்தார். பூபதி எனச் செல்லமாக அழைக்கப்பட்ட அன்னாருடைய மனைவி தனது கணவனின் நடவடிக்கைகளையும், கருத்துக்களையும் அன்போடும், மிகப் பாசத்தோடும், வாஞ்சையோடும் கண்காணித்து தனது குடும்பம் என்ற கோயில் தழைப்பதற்கு தனது கணவரோடு இயன்றளவு ஒத்தாசை புரிந்தார். அதன் பயனாய் ஐந்து மகவுகளுக்கு இவர்கள் தாய், தந்தையராயினர். இக்குடும்பம் மனிததத்துவத்தை நேசித்த ஒரு பல்கழைக்கழகமாகவே பின்னர் வடிவம் பெற்று விட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒரு மனிதன் தனது ‘மனிதத்துவத்தை’ மேலும் மெருகூட்டுவதற்கோ அல்லது இழப்பதற்கோ காரணம் அவன் சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தின் வாழ்வு விழுமியங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. சின்னத்துரையின் மனித விழுமியம் தொடர்பான கோட்பாடுகளும் அவர் சார்ந்து வாழ்ந்து கொண்டிருந்த சமூகத்தின் சார்புத்தன்மையினாலேயே நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்பதில் சந்தேகம் எழமுடியாது. **Man by Nature** அதாவது ஒரு மனிதனுடைய பண்பு அவன் சார்ந்து

வாழ்ந்துகொண்டிருக்கும் சூழ்நிலையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்பதனை அறிஞர்கள் எல்லோருமே ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அமரர் சின்னத்துரையின் வாழ்வுப் பண்பும், வாழ்க்கை பற்றிய இலக்கணமும் அவர் சார்ந்திருந்த சமூகத்தின் இயல்பூக்கங்களினாலேயே தீர்மானிக்கப்பெற்றது. மூன்று பெண் மகவுகளையும், இரண்டு ஆண் மக்களையும் பெற்றெடுத்த பின்னர், அன்னார் அவ்வைந்து விருட்சங்களின் வாழ்வுக் கோலங்களைத் தானே தமியனாய் நின்று தனது கடும் உழைப்பினால் மேலுயர்த்திக் காட்டினார்.

ஒரு மனிதன் பிறந்திருந்தான்; வாழ்ந்திருந்தான் என்பதனை இப்பூவுலகில் பதிவு செய்யவேண்டுமாயின் அம்மனிதன் குறைந்தது ஒரு கிணற்றையாவது வெட்டியிருக்க வேண்டும், அல்லது ஒரு வீட்டையாவது கட்டியிருக்க வேண்டும், அல்லது இரண்டு ஆண்மக்களையாவது பெற்றிருக்க வேண்டும் என்பார்கள். ஆனால் அமரர் சின்னத்துரையோ அவை எல்லாவற்றையுமே ஒருங்கே செய்துமுடித்திருந்தார். தனது 77 வருடகால வாழ்வுப் பரியந்தத்திற்குள் நான்கு கல்வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தார். அவ்வீடுகள் தொழிற்சாலைகளாகவும், புலம்பெயர்ந்தவர்களின் வாழ்வுமையமாகவும் ஆதுலர்சாலையாகவும் விளங்கி சமூகத்திற்கு நன்மை பயக்கத் தக்கதாய் தொழிற்பட்டிருந்தமையைக் காணும் போது தனி மனிதன் ஒருவன் தனது கடும் உழைப்பினால் ''உழைப்பிற்கு வரைவிலக்கணம்'' கற்பித்திருந்தமையைக் காணமுடிகிறது. உழைப்பின் மகிமையை உணர முடியாதவர்கள் அமரர் சின்னத்துரையை விளங்கிக்கொள்ள முடியாதவர்களேயாவர்.

**'Devotion to duty is the Higest worship tham the God'** என்று சுவாமி விவேகானந்தர் அன்று முழங்கியதற்கொப்ப அமரர் சின்னத்துரை அவர்களும் தனது முழுமையான - ஆக்கபூர்வமான நேர-காலப் பகுதியை கடும் உழைப்பு ஒன்றிலேயே செலவிட்டிருந்தார். அக்கடும் உழைப்பினூடாகவே இறைவனின் இருப்பினை, தெய்வீகத்தை நன்கு உணர்ந்து கொண்டிருந்தார். இறைபக்தி என்பது வெறுமனே ஆலயமுன்றலில் நின்றவண்ணம் 'தலையில் குட்டி தோப்புக்கரணம்' போடுவதுடன் மட்டும் வருவதில்லை என்பதனை தனது வாழ்வுப் பரியந்தத்தினுள் அமரர் சின்னத்துரை எடுத்துக்காட்டிவிட்டார். அதனையே தான் அன்று சுவாமி விவேகானந்தரும் எம்மவருக்கு எடுத்துச் சொல்லியிருந்தார்கள்.

வரட்டுக் கௌரவமும், போலிவேடமும் தாங்கி இச்சமூகத்தினுள் ஊடுருவி, தத்தமது முற்பிறப்புப் பயனையும் மறந்து இப்பிறப்பிலாவது ஒருவரை ஒருவர் அடிமை கொள்வோம் என்று எண்ணித்

துணிந்து, பாலர் தொடக்கம் விருத்தர் வரைக்கும் உலாவரும் சமூகப்புல்லர்கள், ஏமாற்றுப் பேர்வழிகள், கூத்திப்பிரியர்கள் ஆகியோர் பெருகிவரும் இச்சமூகத்தின் மத்தியில் அமரர் சின்னத்துரை அவர்கள் வாழ்ந்த வாழ்வு தனிரகமானது; தனித்துவமானது; இறுதியில் தத்துவமுமானது. அன்னாரின் வாழ்க்கைத் தத்துவம் எவரையும் ஏமாற்றியதாகவோ, யாருடைய ஈட்டத்தையும் சுரண்டியதாகவோ, பெண்மையை அகௌரவப்படுத்திய தாகவோ என்றும் அமைந்ததில்லை. மகாகவி பாரதியின் வழியில் நின்று அன்னார் என்றுமே பெண்மையை போற்றியும், துதித்துமே வந்திருந்தமையை அன்னாரது குடும்ப வாழ்வின் இணையின் பிரிவுநிலைப்பட்ட மிக நீண்ட நாட் துயர் எடுத்துக் காட்டியது. அன்றில் பறவைகள் போல் இப்பிறப்பில் அமரர் பூபதியுடன் அமரர் துரை அவர்கள் வாழ்ந்த வாழ்வுப் பரியந்தம் மறுபிறப்பிலும் அவர்கள் இருவரையும் சுற்றிவரும். தனது வாழ்க்கைத்துணை மிக நீண்டகாலமாக நோயுற்றிருந்த நிலையில் அன்னார் அவருக்கு ஒரு தாதியாக, தாயாக, தந்தையாக, தன்னிகரற்ற சேவகனாகச் செயற்பட்டு பெண்மையின் மாட்சியை தன் சொந்தப் பிள்ளைகளுக்கே எடுத்துக் கற்றுக் கொடுத்திருந்தார்.

அமரர் சின்னத்துரை அவர்கள் தூய்மையான பெண்மையைப் போற்றியதனாலே கிடைத்த தவப்பேறு அவர்களுடைய விழுதுகளாக விளங்கும் ஐந்து செல்வங்களும் வாழ்வில் நன்னிலையை ஈட்டவைத்தது அன்னாரது சிரேஷ்ட புத்திரி பேராசிரியர் இரகுபதியின் வாழ்க்கைத் துணையாகவும் (இந்தியா) இரண்டாவது புத்திரி தனது ஆசிரியப்பணியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் கிருஷ்ணராஜாவின் வாழ்வு வழிகாட்டியாகவும், கனிஸ்டபுத்திரி அரசகருமமொழித் திணைக்களப்பணியுடன் இலங்கை விஞ்ஞானத் தொழிநுட்பத் திணைக்களத்தில் விஞ்ஞானத் தொழினுட்பவியலாளராக கடமையாற்றும் ஜெகதீஸ்வரனது இல்லறத்துணையாகவும் இணைந்து, அமரத்துவமெய்திய அன்னாரது வாழ்வின் நோக்கினையும் பயனையும்நிறைவேற்றி வைத்தனர். இருபுத்திரர்களில் ஒருவரான ஜெயதாஸ் மதுரை வாணி என்ற நங்கையை கைப்பிடித்து பிரான்ஸில் இல்லறம் நடாத்தும் கோலத்தையும் அமரர் கண்டு களித்தார். இருந்தும் பிரான்சில் கணனித்துறையில் கல்வி பயிலும் தனதுசிரேஷ்ட ஆண் வாரிசானசிவசந்திரராஜனைத்

திருமணக் கோலத்தில் காணத்தயாராகிக் கொண்டிருந்த நிலையில் தான் நோயுற்றிருந்த வேளையிலும் அதற்காக உழைத்துக் கொண்டிருந்தபோது தனது மகனின் வரவு காண்பதற்கு இன்னும் ஓரிரு மாதங்கள் இருப்பில் உள்ள நிலையில் அன்னார்யாருமே எதிர்பாராதவிதத்தில் தனது வாழ்வுப்பரியந்தத்தினை முடித்துக் கொண்டு ஈசன் இணையடியினை ஐப்பசி 24ஆம் நாளில் சென்றடைந்து விட்டார். பூரணப்படுத்தப்படாத அன்னாரின் இறுதி ஆவலையும் நிறைவேற்றி வைப்பதன் மூலமே, அமரத்துவமடைந்த அன்னாரது ஆத்மா சாந்திநிலை பெறும் என்ற நிலைப்பாட்டினையும் எம் நினைவிலிருத்தி, எமது எதிர்கால வாழ்வுச் செயற்பாட்டை முன்னெடுப்போமாக...!!!

ஆனந்தப் பேரொளியில்
அமைதி கிடைப்பதாக!
எங்கும் சமாதான
சகவாழ்வு மலரட்டும்!!

* * *

*நானேயென்று கிளம்பாதே! நலமுந்தீதும் நாடாதே!*
*ஊனே பேணித் திரியாதே; உலகைத் திருத்தப் பாயாதே!*
*வானேயாகி வளியொளியாய் வாரியாகி வளர் புவியாய்,*
*தானேயாகி நீயாகித் தழைத்த ஒன்றை அறிவாயே!!!*

— **ஞானமாலையிலிருந்து**

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

இதோ மனிதப் பிறவி எடுத்தவர்களுக்கான
சில சிந்தனைகள்

# மனிதம் பற்றி தத்துவஞானிகள்

## 1. வெறுமையில் இருந்து இவ்வுலகில் எதனையுமே உம்மால் உருவாக்க முடியாது!
( You Can't Creat anything in the world out of Nothing )

உனது உள்ளமும், உணர்வும் மரத்துவிட்ட நிலையில் வெறுமை நிலையை அடைந்து விடுமாயின் உன்னால் இச்சமூகத்திற்குப் பெருந்தீங்கே ஏற்படும் என்பதனை அவதானித்துக் கொள். வெறும் நம்பிக்கைகளை மட்டுமே உனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழமுயலுவாயாயின் நீ கண்ணிருந்தும் குருடனாகவே வாழ்ந்து முடிக்க வேண்டியநிலை ஏற்படும். எவ்வாறு ஒரு கை ஒலியை எழுப்ப முடியாமல் செயற்படுமோ அவ்வாறே உனது மரத்துவிட்ட, வெறுமையான வாழ்வுப் பரியந்தம் நிழலாக முடிவு பெறும். அதனை நீக்குமுகமாகவே கொன்ஃபூஷியஸ் உனக்குத்தந்திருக்கும் போதனை பகுத்தறிவு அடிப்படையில் எந்த நிகழ்வினையும் நோக்க வேண்டும் என்ற கோட்பாடாகும். அதாவது எவ்விதமான நம்பிக்கையாயினும் சரி அதனை காரண-காரிய நிமித்தத்தின் அடிப்படையில் சிந்தித்து, விளைவுகளை ஓரளவிற்கு முன்கூட்டியே அனுமானித்து, எந்தவொரு காரியத்திலும் இறங்கி அதனை நடைமுறைப்படுத்துவதனையே அவரது பகுத்தறிவுக் கோட்பாடு எமக்கு கற்பிக்கின்றது. கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு எதிர்த்திசையில் குடிபிருப்பவனுக்கு ஏன் கல்லெறியக்கூடாது என்று எம்முதியோர் எமக்கு புகட்டி வைத்தனர் என்றால் அதன் பாரதூரமான விளைவுகளை அடிப்படையாக வைத்தே ஆகும். எனவே விளைவுகளை எதிர்நோக்காமல், சிந்திக்காமல் காரியத்தை முடிக்க எத்தனிப்பவர்கள் எல்லோருமே வெறுமையானவர்களே! உங்களில் எத்தனைபேர் இப்பாகுபாட்டிற்குள் உள்ளீர்கள்?

**2. எங்கே உன்னிடம் பணிவொழுக்கம் மறக்கப்படுகின்றதோ அங்கே உன்னிடம் அழிவுக்குரிய பாதை திறக்கப்படுகின்றது என்பது பொருள்.**

(Where there the Pavement of Obedient is denied where there destroction is founded)

நல்ல பிரஜை, நல்லகுடும்பம், நல்ல சமூகம், நல்ல அரசு என்ற நான்கு அலகுகளும் பணிவு ஒழுக்கத்தின் பாற்பட்டவையாகவே விளங்குவதனை நீ அறிவாயாக! கொன்வூஸியஸ் தெரிவித்த இக் கோட்பாட்டை நீ பின்பற்றுவாயாகில் சிறந்த மனிதனாகும் வாய்ப்பினையும் பெற்றுவிடுவாய்.

பணிவொழுக்கத்தின் விதி இரண்டு அடிப்படைகளில் எடுத்துச் சொல்லப்படுகிறது : அவையாவன :

1. Law of Obedient - கீழ்ப்படியும் விதி
2. Law of Morality - ஒழுக்கத்தைப் பேணும் விதி

**யார் யாருக்குக் கீழ்ப்படிவது?**

ஒரு சமூகத்தின் அத்திவாரமே குடும்பம் என்ற தனி அலகுகளின் சேர்க்கையிலேயே தங்கியுள்ளமையால், குடும்ப அங்கத்தவர்களின் ஒழுக்கம் ஒரு சமூகத்தின் ஒழுக்க விழுமியத்தைப் பாதிக்கின்றது. ஆகவே குடும்பத்தில் முதலில் கீழ்ப்படிவுக்கோட்பாடு பின்பற்றப்படவேண்டும். கொன்வூஸியசின் படி, குழந்தைகள் பெற்றோருக்கும், மனைவி கணவனுக்கும், மாணவன் ஆசிரியனுக்கும், பிரஜைகள் ஆட்சியாளனுக்கும் கீழ்ப்படிந்து ஒழுக வேண்டும் என்பதாகும். பணிவொழுக்கத்தின் விதி எங்கே பின்பற்றப்படவில்லையோ அங்கே போரும் அழிவும் ஒன்றாகத் தோன்றும். சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையும் ஒழுக்கத்துக்கு அடிப்படையாக அமைந்த விதிகளைப் பின்பற்றினால் அங்கே சட்டக்கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தப்படவேண்டிய அவசியம் ஏற்படாது. ஆகவே தனியாள், குடும்பம், சமூகம் ஆகிய நிலைகளில் கட்டாய நல்லொழுக்க விதிகள் பின்பற்றப்படவேண்டும். நல்லொழுக்கம் என்பது அஞ்ஞானத்தைக் களைவதாகும். ஆகவே அறிவுடைமையாயிருத்தலே நல்லொழுக்க விதியின் தாரகமந்திரமாகும் என கொன்வூஸியஸ் போதிக்கின்றார். நல்லொழுக்க விதியை பின்பற்றிய மனிதனே நல்ல இளைஞனாவான். இந்த நல்ல இளைஞரின் சேர்க்கையே ஒரு நல்ல சமூக

மாகும். இந்த நல்ல சமூகத்தின் சேர்க்கையே நல்லரசாக மிளிரும் என்பது கொன்வூஸியசின் திடமான சிந்தனையாகும். ஆகவே இளைஞனே நீ நல்லொழுக்கத்தைக் கொண்டிருக்கின்றாயா?

## நல்லொழுக்கமுள்ளவரா என்பது எவ்வாறு அறியப்படுகிறது?

கட்டுப்பாடுள்ள ஓர் இளைஞன் நல்லொழுக்கமுள்ளவனாகக் கருதப்படுகின்றான். உடலின் வெளியசைவுகள் ஊடாகவும், உள்ளத்து சிந்தனை முறையூடாகவும் (அர்த்தசௌஷமும் ஆத்ம சௌஷமும் உடையவராகக்) கால, நேர, பருவ நிலைகளுக்கேற்ப கட்டுப்பாட்டுடன் செயலாற்றும் போது ஒரு கட்டுப்பாடுள்ள மனிதன் தோன்றுகின்றான் என்கிறார் கொன்வூஸியஸ். அவ்வாறு கட்டுப்பாட்டுடன் ஒழுகும் இளைஞனை அவனிடமுள்ள மூன்று குணாதிசயங்களில் இருந்து கண்டுகொள்ள முடியும் அவை யாவன :

1. Intelligence - நுண்ணறிவு
2. Courageous - துணிவு / உரம்
3. Good will - கருணை / இரக்கம்

இம்மூன்று குணாதிசயங்களும் பொறுப்புமிக்க கட்டுப்பாட்டுடன் செயற்படும் ஓர் இளைஞருக்கே ஏற்படும். அவ்வாறான இளைஞர்களையே 'சுப்பர்மான்' (Supper Man) என கொன்வூஸியஸ் குறிப்பிடுகின்றார். ஒரு 'சுப்பர்மான்' காற்றினும் கடுகி விரைவார்; நீரின் மீது நடப்பார்; வானில் தாவுவார்; நெருப்பினுள் பயணிப்பார். இவ்வாறான இளைஞர்களைக் கொண்டுள்ள சமூகமே எவ்விதமான குற்றமற்றதும், பஞ்சமாபாதகங்களில் ஈடுபடாததுமான நல்ல சமூகமொன்றை உருவாக்கிக் கொடுப்பதற்கு ஏதுவானதாக அமையும் என்பது கொன்வூஸியசின் நோக்கமாக அமைந்தது. எங்கே உனது சமூகத்தில் எத்தனை பேர் Supper Man க்குரிய உடல், உள ஆளுமையுடன் வாழ்கின்றார்கள் என்பதனை எடுத்துக்காட்டுவாயாக?

## 3. சிறந்த மனிதர்களே சமுதாயத்தின் தூண்கள்; எங்கே நனிசிறந்த மனிதர்கள் இல்லையோ அங்கே உள்ள முழுச்சமுதாயமும் சீரழிவு நிலைக்குட்பட்டு, அழிந்து மறைந்து விடும் என்பதனை தெரிந்து வைத்துக் கொள் !!!

இக்கோட்பாட்டை வெளிப்படுத்தியவர் கொன்வூஸியசின் சீடரான மென்ஸியஸ் என்பவராவர், மென்ஸியஸ் எப்போதுமே நல்ல நடவடிக்கைகளையே சமுதாயத்தில் முன்னெடுக்கப்பட

வேண்டும் என்பதனை வற்புறுத்தி வந்தார். 'ஒரு சமூகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒழுக்கமான மனிதர்களின் ஒரு நிறுவனமே அரசாங்கமாகும்' (The geverment is the institue of Good men from the Sciety) என வற்புறுத்திய மென்ஸியஸ் ஒரு மனிதனுக்குரிய நல்ல குணாதிசயம் அம்மனிதனது பிறப்பினாலேயே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றது என்றும் எடுத்துக்காட்டினார். பிறப்பிலே ஒழுங்கற்ற நிலைக்குள்ளாக்கப்பட்டவர்களிடத்திலேயே தான் பொறாமை, காழ்ப்புணர்வு, தன் மனைவியல்லாத வேற்றுப் பெண்களின் குதிக்கால் முதல் குடுமி வரை ஏற - இறங்கப் பார்க்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கும் கூத்திக்குணம் படைத்ததன்மை, முன்னே விட்டு பின்னே திரும்பிப்பார்க்கும் அசிங்கக்குணம், கூடிக்கெடுக்கும் தன்மை, கல்விச் சிந்தனை யாளர்களுக்கு சேறுபூசும்குணம், தன் தவறான வாதத்திற்கும் கட்சிசேர்க்கும் இறுமாப்புத்தன்மை, சுற்றுமுற்றும் கண்ணைச் சிமிட்டிப் பரிகாசச் சைகை செய்யும் இயல்பு, சொல்லாததைச் சொன்னதென்றும், செய்யாததைச் செய்ததென்றும் ஊர்ப்பரியாரம் செய்யும் தன்மை ஆகிய துர்க்குணங்கள் குடிகொண்டிருப்பதனைக் காணலாம். இக்குணாதிசயங்களைப் பிறப்பிலேயிருந்து கொண்டிருப்பிவர்கள் ஓநாய்க்கும் நரிக்கும் கருக்கட்டி வெளிவந்த தேவாங்கு போன்றவர்கள். இவர்களே ஒரு நல்ல சமூகத்தை சீர்குலைக்க வந்த புல்லுருவிகளாவர் என்பதனை நீ தெளிவாக அறிந்து வைத்துக்கொள்.!!!

**4. ஒரு நல்ல மனிதனை கெட்டவனாக ஆக்கும் செயற்பாடு இரண்டு அலகுகளினூடாக நிகழ்த்தப்படுவதனை அறிவாயாக. அவையாவன :**

1) சூழ்நிலை — Environment
2) சந்தர்ப்பம் — Cireumstance

மனிதர்களின் பிறப்பினால் குணநலன் தீர்மானிக்கப்பட்டாலும் புறச் சூழ்நிலையே அவர்களது 'நல்ல', 'கெட்ட, நடவடிக்கைகளைச் செய்யத்தூண்டுகின்றன. அச்சமூகத்தில் அதுவரையில் சேகரித்து பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் ஒன்றுதிரட்டப்பட்ட (the aguired Charectels) பண்புகளே அம்மனிதனை நல்லவனாகவும், கெட்டவனாகவும் மாற்றிவிடுகிறது. அலட்சிய மனோபாவமும், வறுமையுமே மனிதனை நல்ல வழியிலிருந்து

தீயவழிக்கு இட்டுச் செல்லும் இரு மூலங்களாகும். அலட்சிய மனோபாவம் (Ignorance) வறுமை (Poverty) இவை இரண்டும் சமூக வன்முறையைத் தோற்றுவிக்கும் இரு நிறுவனங்களாகும் இழப்பதற்கு ஒன்றுமேயில்லை என்ற நிலையை வறுமை ஈட்டிக் கொடுப்பதினால் சமூகத்தின் மீதான வன்முறைக்குக் களம் அமைக்கப்பட்டுவிடப்படும் நிலை தோன்றும். அந்நிலை அலட்சிய மனோபாவத்திலிருந்தே தோற்றுவிக்கப்பட்டது. கட்டாயக் கல்வி மூலமே இவை இரண்டினையும் வேரறுக்கமுடியும். ஆகவே ஒரு நல்ல சமூகத்தின் உருவாக்கத்திற்கு கட்டாயக் கல்வி இன்றியமையாதது என்பதே மென்ஸியசின் அடிப்படைக் கோட்பாடாகும்.

*          *          *

*மண்ணா லாகி மட்குடம் போல் மண்ணாய் முடியு*
*முலகினிலே*
*கண்ணிற் புத்தி விட்டு மதிகலக்கி ஆளைச் சீரழிக்கும்*
*பெண்ணிற் புத்தி விட்டு வீண்பேச்சுப் பேசியிருப்பவரை*
*எண்ணியெண்ணி எனக்கு நிதம் எரிப்புஞ் சிரிப்பும்*
*வருகுதையோ!*

**— ஞானமாலையிலிருந்து**

## எங்கே சென்றீர்கள் என் தாத்தாவே?

பாப்பா பிறந்தது என பக்குவமாய் பார்த்தீரே!
பரம்பரைக்கு ஓர் பேர்த்தி என பேதலித்து பார்த்தீரே!
பாடசாலை தனில் பக்குவமாய் அழைத்து வந்து
அடைகொடுத்து வளர்த்தீரே!
அடைக்கலமாய் இருந்தீரே!
எப்போ என் வாழ்வு உயரும் என ஏங்கி நினைத்தீரே!
அதைக் காண உணர்வில்லாது உயிரற்றுச் சாய்ந்தீரே!
எங்கே சென்றீர்கள் என் தாத்தாவே?

நோயுற்ற வேளையிலும் கண்ணீர் மல்க சுகம் தடவி வளர்த்தீரே! உம் உள்ளம் அதை, நான் எங்கே எப்போ காண்பேன் என் தாத்தாவே! பிறைநிலா என்று அழைத்த பெயர் ஒலிகேட்பதெப்போ? நெஞ்சுவலி தாங்காது பிறைநிலா என தட்டி எழுப்பிய ஒலியோடு எங்கே சென்றீர்கள் என் தாத்தாவே?

காற்றாய் பறக்கிறேன்; சருகாய் கருகுகின்றேன்; உம் பிரிவால் வாடுகின்றேன் அடைக்கலம் இனி இல்லை என்று எங்கே சென்றீர்கள் என் தாத்தாவே? எனக்கோர் பதிலளிப்பீர் என் தாத்தாவே?

25-11-2001

அன்புப் பேர்த்தி
**கி. பிறைநிலா**

## பதிலொன்று அளிப்பீரே என் பப்பாவே

மடலொன்று வரையாயோ என் அம்மாவே
என்று காத்திருக்கையில்...
மடலுக்கு மடலாய், பதிலுக்குப் பதிலாய்
அம்மாவும் நீவிராய் பப்பாவும் நீவிராய்
வாழ்ந்தீரே சில வருடம், இப்போ எங்கே சென்றீரோ...
பதிலொன்று சொல்வீரே என் பப்பாவே.

மந்திரங்கள் போதித்தீர் தந்திரங்கள் புகட்டினீர்
கல்விதனில் பாரினிலே எம் மக்கள் ஓங்கிட
வேண்டும் என்று உள மனதில் கைக்கொண்டு
ஆளாக்கினீர் உம் மகவுகளை ஆளாக்கி
ஆறவில்லை காத்திருந்து ஆறவில்லை
காலனவன் வந்தவனோ பதிலொன்று உரைப்பீரோ
என் பப்பாவே.

மனதில் எதை நினைத்தீர், Operation
செய்துவிட்டு சுகமாய் வாழ்வேன் என
ஆலோசனை கேட்டீரே பதிலுக்குப்
பதிலளிக்க முன்னரே பாரை விட்டு மறைந்தீரோ...
பதிலொன்று தருவீரே என் பப்பாவே.

ஆஸ்திக்கு உம் மகனைக் காத்திருந்தும்
காணக் கிடைக்காத பாவியானீரே, பாவியானாரே
குலக்கொடியில் ஒரு பெருமகன் பூதலத்தில்
இருக்கின்றார் என

சித்தப்பா, அண்ணா, மாமா
என முறைகொண்டு அழைத்தோர்
எல்லோரும் பரிதவிக்க விட்டு விட்டு
எங்கே பறந்தீரோ
பதிலொன்று அளிப்பீரோ என் பப்பாவே.

மூலவேர் சாய்ந்ததுவோ! முகமதிதான் மறைந்ததுவோ!
யாரும் எண்ணியிருக்கா வேளைதனில்
ஒப்பாரி ஒலி கேட்டு பதைபதைத்தனர்
உறவினர், அயலவர்.
ரெலிபோனில் செய்திகேட்டு மறுபோன்
வார்த்தை வராமல் அலறினோர் உம் உறவுகள்
என் செய்வேன் யானே?
பதிலொன்று அளிப்பீரோ என் பப்பாவே.

அன்பு மகள்
**கி. சிவகுமாரி**

# தெய்வமாய் நெஞ்சினில்...

வாழிடம் இழந்து வழிதெரியாது
திகைத்து நின்றேனைவா என்று
கூவியன் றழைத்துப் பணம்செலவிட்டுன்
வீட்டினைப் புதுக்கி நாம் இருக்க
ஆவன அனைத்தும் குறைவறச் செய்த
அன்பினை நினைந்துளம் நெகிழும்
தேவர்தம் உலகு சென்றனை என்பர்
தெய்வமாய் நெஞ்சினிலே இருப்பாய்.

கடலோடு போன முதலினை நினைத்து
கவலையில் மூழ்கிநான் இருப்ப
தொடருக தொழிலை எனமுதல் தந்து
தூண்டிய அன்பினை நினைப்பேன்
நடைமெலிந்திவ்வூர் நண்ணிய எமக்கு
நன்னிழல் தந்த நன்றியை இவ் –
உடலினுள் இயங்கும் உயிருளவரைக்கும்
உணருவன் உருகுவன் கசிந்து!

சாவகச்சேரி
25-11-2001.

ச. சத்குருசங்காரம்

# இந்துநாகரிகம் - வரலாற்று நோக்கு

இச்சிறு ஆய்வுக் கட்டுரையானது 17-01-1998 சனிக்கிழமையன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையினரால் **இந்து நாகரிகம்-பன்முகப்பார்வை** என்ற **தலைப்பில்** பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் (கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) தலைமையில் நடாத்தப்பட்ட கருத்தரங்குத் தொடரில் என்னால் வாசிக்கப்பட்டதாகும். பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்களாலும், ஆய்வாளர்களாலும் கருத்தூன்றிக் கவனிக்கப்பட்ட அதேகட்டுரை எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாது, க.பொ.த. உயர்தர மாணவர்களது நன்மை கருதி இந்த நினைவிதழில் பிரசுரம் செய்யப்படுகிறது.

**செல்லையா கிருஷ்ணராசா**
கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.
25-11-2001

## இந்துநாகரிகம் – வரலாற்று நோக்கு

### ஆய்விற்கான அறிமுகம் :

நாகரிகங்கள் பற்றிய வரலாறானது மனித இனத்தின் வாழ்வியலில் ஒரு புதிய அத்தியாயமாக அமைந்தது. கி. மு. 3000ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட நதிப்பள்ளத்தாக்குகளின் மருங்கே மனிதகுலம் நாகரிக வாழ்வு முறையை உருவாக்கியிருந்தது. அத்தகைய நாகரிக வாழ்வுமுறையின் சிறப்பு அம்சமாக அமைந்தது நகரங்களே ஆகும். எகிப்தில் நைல்நதிப் பள்ளத்தாக்கிலும், மத்தியாசியாவில் யூப்பிரட்டீஸ் - ரைகிறிஸ் நதிப்பள்ளத்தாக்கிலும், சீனாவில் சிக்கியாங் - குவாங்கோ நதிப்பள்ளத்தாக்குகளிலும் தென்னாசியாவில் இந்துநதிப் பள்ளத்தாக்கிலுமே முதல் நகரங்கள் (First Cities) தோற்றுவிக்கப்பட்டிருந்தன. நகர வாழ்வு முறையினூடாகப் பரிணாமமடைந்த நாகரிக வாழ்வே மனுக்குலத்தின் சமயவாழ்விலும் - நம்பிக்கை - மரபுகளிலும் பெரும்பங்காற்றியிருந்தன. கி. மு. 3000ஆம் ஆண்டளவில் இந்நதிப் பள்ளத்தாக்குகள் ஒவ்வொன்றிலுமே பத்திற்கு மேற்பட்ட நகரங்கள் உருவாகி, நன்கு செழிப்புற்று, மக்கள் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமாகின. இம்மாற்றங்களுக்கும் வளர்ச்சி நிலைகளுக்கும் அடிப்படையாக விளங்கிய காரணி வளமான வண்டற் சமவெளிகளும் அவற்றினூடே ஈட்டப்பெற்ற மேலதிக செல்வப்பெருக்குமே ஆகும். நகரங்களின் தோற்ற வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியிருந்த அதே பொருளியல் ஈட்டமே அம்மக்கள் வாழ்வில் செல்வாக்கு செலுத்தியிருந்த சமய வாழ்விற்கும் - சமய நெறிமுறைகளுக்கும் அடிப்படையாக விளங்கியது எனலாம்.

நைல்நதிப் பள்ளத்தாக்கு மக்களது மறுபிறப்பு நம்பிக்கையிலும், சுமேரிய மக்களது (யூப்பிரட்டீஸ் - ரைகிறீஸ் பள்ளத்தாக்கு) வெள்ளப்பெருக்கு - ஊழிக்காலம் பற்றிய நம்பிக்கையிலும் குவாங்கோ நதிப்பள்ளத்தாக்கு மக்களது விண்ணுலகம் (Ti) பற்றிய நம்பிக்கையிலும் நகரவாழ்வின் செழிப்பு நிலை பெருஞ்செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது. நிலத்தின் வளமும் வாழ்வின் செழிப்பும் இணையும்போது அடிப்படை நம்பிக்கைகளுடன் மக்கள் வாழ்வில் சடங்குமுறைகளும் வழிபாட்டு முறை இணைந்தமையை இங்கு காண்கின்றோம். இவையே ஒவ்வொரு நகரநாகரிக வாழ்வினை - வாழ்வுமுறையை தனித்துவப்படுத்தும் அளவீடாகவும் - சமூகக்குறிகாட்டியாகவும் அமைந்துவிடுகின்றன. மனித சிந்தனை வரலாற்றில் பிறப்பு - இறப்பு - அவதாரம் - அதிகாரம் போன்ற சமயக்கருத்துக்கள் நகரநாகரிக வாழ்வுடனேயே

தோன்றி பரிணாமமடைந்தமையினைக் காண்கின்றோம். இவ்வாறு சமயக்கருத்துக்கள் தோற்றம் பெற்றமைக்கும் மனுக்குலத்தின் பொருளியல் ஈட்டத்திற்கும் இடையே மிக நெருங்கிய தொடர்புகள் காணப்பட்டிருந்தன. அவையே ஒவ்வொரு நாகரிக வாழ்வின் சமயவரலாறாகவும் பரிணாமமடைந்தன.

இந்துநதிப் பள்ளத்தாக்கு நகரநாகரிக வாழ்வும் அதன் சமய வரலாறும் மேலே கூறப்பட்ட கருத்திற்கு விதிவிலக்கானவையல்ல. அகத்தியர் கதை மரபினை மையமாகக் கொண்ட நகர நாகரிகம் இங்கு கி. மு. 3500ஆம் ஆண்டிலிருந்து கி. மு. 1760ஆம் ஆண்டு வரைக்கும் வளர்ச்சி பெற்று இருந்தமையினை அண்மைக் காலங்களில் சேர். ஐராவதம் மகாதேவன் எடுத்துக்காட்டியுள்ளார். சுமேரிய நகர நாகரிகத்தில் ஒரு ''கில்காமெஸ்'' ஐதீகம் போன்று, இந்துநதிப் பள்ளத்தாக்கு நகர நாகரிகத்தில் 'அகத்தியர் ஐதீகம்' எடுத்துக்காட்டப்பட்டிருப்பது அந் நாகரிகத்தின் சமய வரலாற்றையும் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளது எனலாம். அகத்தியர் பற்றிய கதை மரபுகள் பல வடிவங்களில் தீபகற்ப இந்தியாவில் நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. காகம் கமண்டலத்தைக் கவிழ்த்த கதை, விந்தியமலையை அகத்தியர் அடக்கிய கதை, மகோதரன் - குண்டோதரன் ஆகிய அரக்கர்களை அழித்த கதை, உலகம் சமநிலை பெற்றுக்கொள்வதற்காக அகத்தியர் கைலையிலிருந்து தெற்கே வந்த கதை என அவற்றுள் சில வடிவங்கள் திருவிளையாடற் புராணத்திலும், திருக்கைலாய புராணத்திலும் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். இந்துக்களின் வைதீக மரபில் இம்மரபுகள் இன்று பெரிதும் போற்றப்படுவதனையும் காணலாம். மேலும் அகத்தீஸ்வரம் என்றொரு கோவில் தொண்டைமண்டலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதும், இந்தோனேசியாவில் அகத்தியருக்கென ஓர் ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதும், இந்துக்களின் பரிவார தெய்வங்களுள் அகத்தியர் ஒருவராக இணைக்கப்பட்டிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இப்பின்னணியில் இந்துநாகரிகம் ஒன்று தென்னாசியாவில் நகரவாழ்க்கை முறையினடியாகத் தோற்றுவிக்கப்பட்டு, (ஏனைய நாகரிகங்கள் போலல்லாது (சீனாவைத் தவிர) இற்றை வரை வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒன்றாக - மக்கள் வாழ்க்கைமுறையுடன் ஒன்றிணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விணைப்பானது தென்னாசியாவிற்கும் அப்பால் - கடல் கடந்து தென்கிழக்காசிய நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டதோடு, இற்றைவரைக்கும் அந்நாடுகளின் பண்பாட்டுக் கருவூலங்களில் முத்திரை பதித்துக்கொண்டிருப்பதனையும் காணலாம்.

எனவே 'இந்து நாகரிகம்' என்பது இந்துநதிப் பள்ளத் தாக்கு நகரவாழ்விலிருந்து தோன்றி, பின்னர் கிழக்கேயுள்ள நதிப்பள்ளத்தாக்குகளின் வளத்தினூடே வைதிக சமய மரபுகளையும் ஒன்றிணைத்த வகையில் ஊர்ந்து - பரந்து சென்று, காலத்திற்கேற்ற வகையிலும் - பிராந்தியச் சூழலுக்கேற்ற வகையிலும் வளர்ச்சி பெற்று இந்து சமயமாக மக்கள் வாழ்வில் பரிணாமமடைந்தது என்றால் அக்கூற்று 'மிகையாகிவிடமுடியாது. அத்தன்மையின் பின்னணியில் ஏற்பட்ட நகரவாழ்வு முறை ஒரு நாகரிக வாழ்வு முறையை உருவாக்கக் காரணமாகியது போன்று இந்து நாகரிக வாழ்வுமுறையின் தோற்றத்திற்கும் பல அடிப்படை அம்சங்கள் காரணிகளாக இருக்கின்றன. இந்துநாகரிகமென்பது தனியொரு இன-மத-சமூக-பொருளியல் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தினை இன்று எவருமே ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறாயின் இந்து நாகரிகத்தின் கர்த்தாக்கள் யார்-யார் என்ற ஒரு கேள்வி எம்முன்னே எழுவதும் இயல்பே.

## இந்து நாகரிகமா? இந்து மதமா? :

இந்து மதத்தின் மூலமொழி 'சிந்தி மொழி' என வணக்கத்திற்கு உரிய சேவியர் தனது The Land of Letters என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அம்மொழியை - அதன் ஆரம்பத்தினை இனம் கண்டு கொள்ள முடியாதவோர் நிலையில் சிந்து நாகரிகமே இந்துநாகரிகமாகும் என்ற ஓர் எண்ணக்கரு இன்று ஆய்வாளர் மத்தியில் நிலைகொண்டுவிட்டது. ஆதலால் இந்து நதிப் பள்ளத்தாக்கு மக்களே 'இந்துநாகரிகத்தின் முதலாசிரியர்கள்' என்ற கருத்தும் வலுவடைந்து விட்டது பெயரளவில் அவ்வாறான ஒரு பொருத்தப்பாடு காணப்படினும், இந்துநாகரிகத்தின் உள்ளீட்டினை நோக்கும் போது அது தனியே ஒரு குழுவினராலோ - சமூகத்தினாலோ அல்லது தனித்துவமான ஒரு பண்பாட்டுக்குரிய குழுமம் அல்லது குழுக்களாலோ ஆக்கப்பட்டதல்ல என்பது தெளிவாகும். பதிலாகப் பல குழுமங்களினதும் பல இலட்சினைகளையுடைய நாடோடி வாழ்வுமுறைக்குரிய இனக்குழுக்களதும் மதப்பிரிவுகளதும் பல பண்பாட்டுப் பகைப் புலங்கள் இணைவு பெற்றுக்கொண்ட ஒரு நீண்டகால பரிணாமத்தின் விளைவே இந்துநாகரிகமாகும் என்பது தெரியவரும். எனவே இந்துநாகரிகத்தின் தோற்றம் தொடர்பாக இந்துநதிப் பள்ளத்தாக்கு நகர நாகரிக வாழ்வுமுறை இணைக்கப்பட்டுக் கூறப்படினும், உண்மையில் இந்துநாகரிகத்தின் தொடக்கம் இன்னோர் முனையையே சுட்டிநிற்கின்றது. அதுவே 'செழிப்புத் தெய்வக்' கருத்தமைவாக வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்வில் பின்பற்றப்பட்டு வந்த ஒரு கோட்பாடாகும். இம்

மரபு 'மனித வாழ்வினை'யும் 'மனித நடவடிக்கைகளை'யும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இனக் குழுமங்களுக்குரிய பொதுமையான ஒன்றாக உருவாக்கப்பட்டதாகும். ஆங்கில மொழியில் இதனை Fertility Cult என்று குறிப்பிடுவார்கள். தென்னாகியப் பிராந்தியத்தின் சூழலில் செழிப்புத் தெய்வக் கோட்பாடுதான் இன்று வளர்ச்சி பெற்றுக்காணப்படுகின்ற இந்து நாகரிக வாழ்வின் அடிப்படையின் தத்துவ மூலமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. அதுவே புருஷ - பிரக்கிருதிக் கோட்பாடாக இந்துதத்துவ ஞானத்தின் அடிப்படையாக இற்றை வரைக்கும் செல்வாக்குச் செலுத்தியவண்ணமுள்ளது.

## இந்துநாகரிகத்தின் ஆக்ககாலம் இரு முனைப்புகள்:

இந்துநாகரிகம் பற்றி ஆராய்வோர் ஒரு குறிப்பிட்ட பிராந்திய எல்லைக்குட்பட்ட நிலையிலோ அல்லது சமூகக்கட்டமைப்புக்குள் அகப்பட்ட வகையிலோ நின்று ஆய்வினை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் இந்துநாகரிகத்தின் தோற்றம் - வளர்ச்சி- உச்சநிலை - தாழ்வுநிலை என்ற வகையில் அதன் பரிணாமம் ஒரு நீண்டகாலப் பரப்பினை தன்னுள் உள்ளடக்கிக் கொண்டுள்ளமையினாலாகும். ஆகையினால் இந்து நாகரிக வரலாற்றில் 'ஓர் ஆக்ககாலம்' என்ற பகுப்பினையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையும் உண்டு. கி. மு- 3500ம் ஆண்டிலிருந்து கிறீஸ்தவ சகாப்தத்தின் தொடக்கம் வரைக்கும் உள்ள காலப்பரப்பினை இந்துநாகரிக வரலாற்றுப் பரப்பில் ஓர் ஆக்ககாலமெனலாம். ஏறத்தாழ மூன்றரை நூற்றாண்டுக்காலப் பரப்பினை உள்ளடக்கிய வகையில் இருமுனைப்புக்களாகிய சுதேச - விதேச முறைமையில் இந்துநாகரிகத்தின் ஆக்ககாலப் பகுதி வளர்ச்சி கண்டது எனலாம். கி. மு. 1760 வரைக்குமுள்ள காலப்பரப்பில் இந்து நாகரிகத்தின் சுதேசக் கருநிலை வளர்ச்சியும் பின்னர் கி. மு. 1760 இலிருந்து கி. மு. 1ம் நூற்றாண்டின் பிற்கூறு வரைக்கும் விதேச முறைமையுடனான கரு உருமாற்ற வளர்ச்சி நிலையும் அதன் ஆக்ககாலப் பரப்பினுள் ஏற்பட்டுக் கொண்டது எனலாம். விதேச முறைமை என்று இங்கு குறிப்பிடப் படுவது இந்தோ-ஆரிய சமூகத்தினரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட புதிய கருவிப் பாவனையுடன் இணைந்த சடங்கு முறைகள் ஆகும். ஆகவே இரும்பு உலோகத்தின் அறிமுகம் இந்துநாகரிக வரலாற்றில் அதன் இரண்டாவது முனைப்பினைச் சுட்டி நிற்கின்றது,

முதலாவது முனைப்பு செம்பு உலோகப் பாவனையுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது. இவ்விரு உலோகங்களின் பாவனை முறையானது அவற்றின் தன்மைக்கேற்ப இந்து நாகரிகத்தின் ஆக்க கால வரலாற்றில் அதன் சமூக-தொழிநுட்ப - பொருளாதார வளர்ச்சியிலும் இரு வெவ்வேறுபட்ட தனித்துவமான இயல்புகளைக் கொண்டிருக்கக் காரணமாக இருந்தமை தவிர்க்க முடியாததே.

## இரண்டாம் கட்ட வளர்ச்சி:

கி. பி 1ஆம் நூற்றாண்டுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட புதிய சமூகப் பொருளாதாரச் சூழல் தென்னாசியாவில் ஏக காலத்தில் பிரதேச வேறுபாடின்றி மக்கள் வாழ்வுமுறையில் ஒருவகையான புத்துணர்வினை ஏற்படுத்தியிருந்ததென்றால் அது மிகையாகாது. கி. பி- 1ஆம் நூற்றாண்டுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட அப்புத்துணர்வு போட்டிச் சமயக்குழுக்களின் நடவடிக்கைகளூடாகத் தோற்றுவிக்கப்பட்டிருந்தது என்பதில் சந்தேகம் எழமுடியாது. அதனால் இந்துநாகரிகத்தின் இரண்டாம் கட்ட வளர்ச்சி ஒரு தத்துவார்த்தப் போக்கின் அடியாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய ஒரு சூழல் உருவாக்கப்பட வழி சமைக்கப்பட்டது. இக்காலத்தில் ஏற்பட்ட இந்துநாகரிகத்தின் வளர்ச்சி நிலைகள் யாவும் தத்துவார்த்தப் போக்கினை அதன் எல்லாமுனைகளிலும் கொண்டிருந்தது. பக்திநிலை அவ்வெல்லா முனைப்புக்களையும் தொடர்புபடுத்தி வைத்த ஒரு புத்துணர்வாக மாறியது.

## இந்துநாகரிகத்தின் உள்ளீடுகள்:

கிறீஸ்தவ சகாப்தத்தின் பின்னரும் அதற்கு முன்னரும் உள்ள நிலையில் இந்துநாகரிகத்தின் பரிணாம வளர்ச்சியை இருபெரும் பிரிவுகளாக வகுக்க முடிகிறது. அதாவது கிறீஸ்தவ சகாப்தத்திற்கு முன்னர் ஏற்பட்ட இந்துநாகரிகத்தின் வளர்ச்சியில் அதன் உள்ளீடுகளான சமய நிறுவனம் / ஒன்றுகூடல் மையம் அல்லது ஆராதிக்கும் மண்டபம், நிவேதிக்கும் பொருள் - நிவேதிக்கப்படுபவரது வடிவம் போன்றவற்றில் பிரமாணீயமற்ற மரபும், ஆகம மரபும் என ஒழுக்காறுகள் காணப்பட்டிருந்தன. இக்காலப்பரப்பில் இவ்விரு ஒழுக்காறுகளுக்கும் பொதுப்படையாக அமைந்த பொருளியல் தேட்டமானது நீர்ப்பாசன விவசாயப் பொருளாதார அபிவிருத்தி முறையுடன் இணைந்து காணப்பட்டிருந்தது. இக்காலப்பரப்பினுள் நிகழ்ந்த இரு நகர மயமாக்க நிகழ்வுகளும் பெருமளவிற்கு நீர்ப்பாசன - விவசாய பொருளியலீட்டத்தின் பின்னணியிலேயே நடந்தேறின. ஆனால் கி. பி. முதலாம் நூற்

றாண்டிற்குப் பின்னர் சமுத்திரவியல் - வாணிப பொருளீட்டலின் முனைப்புடன் இந்துநாகரிகத்தின் உள்ளீடுகள் இணையத்தொடங் கியவுடன் அதன்மேற்கட்டுமானம் புதுப்பொலிவுபெற ஆரம்பித்து விட்டது. கடல் வாணிபம் எழுச்சி கண்டதன் பின்னணியில் இந்துநாகரிக வரலாற்றில் சமுத்திரவியற் பண்பாடு பாரிய தாக் கத்தினைச் செலுத்தவாரம்பித்தது. இக்காலத்திலிருந்து தென் னாசியாவின் எல்லா மூலை - முடக்குகளிலும் கோவில்கள் தோற்றம் பெற ஆரம்பித்துவிட்டன. மானிய சமூக அமைப்பு முறையின் பின்னணியில் பக்திநெறி புதியதோர் வடிவத்தினைத் தழுவிக்கொள்ள - இந்து - மகாயான நெறிமுறைகள் ஒன்றை யொன்று நெருங்கிய வகையில் இணைவு பெற்ற ஒரு நாகரிக மாக வளர்சசி பெறத்தொடங்கியது. தென் - தென்கிழக்காசிய நாடுகளில் இந்துமதமும் - மகாயான பௌத்த மதமும் சமத்து வமான செல்வாக்குப் பெறுவதற்கு அதுவே அடிப்படையாகவும் அமைந்தது. குப்த - சதவாஹன - பல்லவ - சோழ - விஜயநகர நாயக்க வம்சங்களின் பங்களிப்புக்கும் சாதனைக்கும் மேலே கூறப் பட்ட இந்துநாகரிகத்தின் இரண்டாம் கட்டமாகிய சமுத்திர வியற் பண்பாட்டினையே குறிப்பிட்டு நின்றது எனலாம். நில மானிய சமூக அமைப்பு முறையைத் தழுவிய வகையில் அக் காலச் சமூக - பொருளாதார நிறுவனங்களாக கோயில்கள் எழுச்சி பெற்றமையும், கடல் கடந்து திரைகடலோடியும் அந் நாகரிகத்தினைப் பரப்ப எடுக்கப்பட்ட முயற்சிகளும் இக்காலத்து முக்கிய நிகழ்வுகளாகும். 'சதுர்வேதிமங்கலங்கள்' என்ற பிரா மணக் குடியேற்றங்கள், வணிக கணங்களின் குடியேற்றங்கள் கோயிற்பற்றுக்கள், தேவதாசியமைப்புக்கள் போன்றன இந்துப் பேரரசக் கட்டுமானத்தின் உள்ளீடுகளாயின. இவையே தென் கிழக்காசிய நாடுகளின் மக்கள் வாழ்விலும் செல்வாக்கினை ஏற் படுத்துவதற்கு வழிவகுத்தவையாகவும் அமைந்தன.

## இந்துநாகரிகத்தின் பிராந்தியச் சூழல் :

இந்து நாகரிகம் பற்றி ஆய்வு செய்வோர் அதன் ஆரம்பச் சுவடுகளை தென்னாசியாவின் வடமேற்குப் பரப்பிலிருந்தே இனங்கண்டு கொள்வர். தென்னாசியாவின் ஏனைய பிராந்தியங் களில் கிடைத்த இந்து நாகரிகச்சுவடுகள் காலத்தால் சற்றுப் பிற்பட்டவை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இந்தியாவின் வடமேற்குப் பரப்பானது தொன்று தொட்டு பல இன - குழு - பலபக்கப் பண்பாட்டுச் சங்கமிப்புக் குரிய மையமாக திகழ்ந்து வந்தமையே விரைவான அபிவிருத்தி நிலை தோற்றம் பெறுவதற்குக் காரணமாகியது. இவ்வபிவிருத்தி நிலையே இந்துநாகரீகத்தின் ஒரு போட்டிக்கூறான மகாயான வாத நிலையைத் தோற்றுவிக்கவும், அங்கிருந்தே அம்மதப்பிரிவு

தென் - தென்கிழக்காசிய நாடுகளுக்கு பரவியமையும் இந்துநாகரிக வரலாற்றில் ஒரு புதிய அபிவிருத்தியாய் அமைந்தது. இத்தகைய புதிய அபிவிருத்திச் சூழலின் பின்னணியில் மாயானவாதிகளையும் - வைணவவாதிகளையும் இணைக்கின்ற வகையில் சமய - தத்துவ வளர்ச்சிப் பாரம்பரியம் ஒன்று தோற்றுவிக்கப் படவே, இந்துநாகரிகத்தில் புதிய பிராந்தியச் சூழலும் உருவாக்கப்பட வழிசமைக்கப்பட்டது.

'ஆரியவர்த்தம்' என்றகோட்பாடு ஊடாக வைணவ மதத்தின் பிராந்தியச் சூழலை எடுத்துக்காட்டியது வட இந்தியாவிலாகும். தொண்டை மண்டலத்திலிருந்து கர்னாடகப் பரப்பிற்கு வைணவத்தின் பிடி மாற்றமடைந்து சென்றது தென்னிந்தியாவிலாகும். வங்களாப்பரப்பு தாய்த் தெய்வ வழிபாட்டின் பின்னணி நிலமாக மாற்றமடைந்தமையை வங்காளத்து பாலவம்சம் உறுதிப் படுத்தியது. ஈழம் மகாயான - தேரவாத - இந்துமதத்தின் பிடிக்குள் அகப்பட்ட பண்பாட்டு நிலைக்களனாயிற்று. தென்கிழக்காசியா மகாயானமும் இந்துமதமும் இணைந்த வகையிலமைந்த பண்பாட்டு வெளிப்பாட்டிற்குரிய பகைப்புலமாயிற்று. இவ்வாறு இந்துநாகரிகத்தில் பிராந்திய ரீதியான பண்பாட்டுப் பகைப் புலங்கள் தோற்றம் பெறுவதற்கு சமுத்திரவியல் சார்ந்த வாணிப ஈட்டத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்வச் செழிப்பே காரணமாக அமைந்து கொண்டது. எனினும் ஈழத்தைப் பொறுத்தவரையில் கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரைக்கும் நீர்ப்பாசனவியல் தொழில்நுட்ப முறையிலமைந்த உபரி உற்பத்தியே இந்து மதத்தின் போட்டிப் பிரிவுகளின் ஜீவனோபாய நாடியாகத் திகழ்ந்தது என்றால் அது மிகையாகாது.

போட்டிக் குழுக்களுள் ஒன்றான மகாயான பௌத்தமதம் மத்திய ஆசிய - கிழக்காசிய நாடுகளுக்கும் தூரகிழக்காசியாவிற்கும் பரந்து கொண்டிருந்த மார்க்கம் ஆசியாவின் குறுக்காக அமைந்த 'பட்டுவர்த்தகப்பாதை' என்பதாகும். இந்தியாவை இணைத்து வைத்திருந்த இம்மார்க்கமே சீன - அராபிய வியாபாரிகளது இந்திய வருகைக்கும் அடிப்படையாக விளங்கியிருந்தது. அதாவது கைத்தொழிலை அடிப்படையாக கொண்ட பட்டாடை வாணிப மார்க்கம் தரை மார்க்க - கடல்மார்க்கங்களினூடாகப் பெருவளர்ச்சி கண்டது. சேணியர் என்ற புதிய சமூகப் பிரிவினர் அரசியல் - சமூக நிலைகளில் உயர்ந்த அந்தஸ்த்தினைப் பெறத்தொடங்கிய காலகட்டம் இதுவே எனலாம். நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்ற ஆடைகள் பல்வேறு தரத்தில் இக்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டன. அரச - பிரபுத்துவ நிலையிலிருந்து சாதாரண பொதுமக்கள் நிலைக்கு பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி ஆடைகள் வழங்கப்பட்ட காலம் இக்

காலமாகும். இத்தகைய ஒரு நிலையை மகாயான பௌத்தம் அதாவது புதுமெருகு படுத்தப்பட்ட இந்துமதக் கடவுளர் - அவலோகிதீஸ்வரர் (ஈஸ்வரர்) போன்ற மிகவும் வனப்பு மிக்க தெய்வங்களின் வெளிப்பாட்டின் ஊடாக சமூகம் புதியதொரு அந்தஸ்து நிலையை அடைந்து கொண்டது எனலாம். இப்பின்னணியிலே கி. பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து இந்துசமய - மகாயானக் கடவுளர்களின் ஆடையமைப்பும் வனப்பும் பொதுமக்களின் பொதுவாழ்வின் தன்மைகளைக் கொண்டு அமைந்தமையைக் காண்கின்றோம்.

தென்னிந்தியாவிலிருந்து இக்காலத்திலேயே உரோமுக்கும், பிறநாடுகளுக்கும் வாணிபப் பொருட்களுடன் பெருந்தொகையான ஆடைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தமைக்கான தொல்லியற் சான்றுகள் கிடைத்து உள்ளன. தென்னிந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆவரம்பிட்டி என்ற மையத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வுச் சான்றுகள் கார்ணேலியன் கற்கள் பதிக்கப்பட்ட ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தமைக்கான நிலையை உறுதிப்படுத்தியுள்ளன. காவிரிப்பூம்பட்டினத்துடன் இணைந்த திருக்காம்புலியூர் அகழ்வுச் சான்றுகள் ஆடைகள் பற்றிய பல தகவல்களைத் தந்ததோடு மட்டுமல்லாது முதன்முதலாக தமிழகத்தில் நாகலிங்க வணக்கமுறையும் இருந்தமைக்கான தொல்லியல் சான்றினையும் வழங்கியுள்ளது. நாகலிங்க வழிபாடானது வண்ணக்கர்வழிபாட்டு மரபின் அடியாகத் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டது என்பதே சமூகவியல் வரலாறாகும். இலங்கைத் தீவிலும் இதே காலகட்டத்தில் ஆடை தயாரிப்புத்தொழில் வளர்ச்சி கண்டிருந்தமைக்கான சான்றுகளை பிராமிச் சாசனங்களினூடே காண்கின்றோம். வடமேற்கிந்தியாவில் காந்தாரமும், வடகிழக்கிந்தியாவில் தாமிரலிப்தி மற்றும் பாடலிபுத்திரமும் இக்காலத்தில் ஆடை உற்பத்திக் கைத்தொழிலில் நன்கு விருத்தி பெற்றிருந்தன. தமிழகத்தில் கிடைத்துள்ள தொல்லியற் சான்றுகள் அங்கு வெண்துகில், லினன்பட்டு போன்ற ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த முறையினை உறுதிப்படுத்தியுள்ளன. சங்க இலக்கியங்களில் துகில் பற்றிய பல செய்திகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பின்னணியானது பெருங்கற் காலத்து விவசாயப் பெருமக்களின் வாழ்வுமுறைகளுடன் ஒன்றிணைந்த வகையில் தென்னிந்தியாவில் வளர்ச்சியடைந்திருந்த மத - நெறிமுறைகளை விளங்கிக் கொள்ள உதவுகின்றது. கி. மு. 1000ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 4ஆம் நூற்றாண்டு வரைக்கும் இந்துப் பண்பாட்டின் அவைதீக நிலை தீபகற்ப இந்தியாவின் பல இடங்களிலும் அகழ்வுகள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. வேல் போன்ற சின்னங்கள் இரும்பினால் செய்யப்பட்ட முறை

யில் அகழ்ந்து பெறப்பட்டுள்ளன. வேலன் வழிபாடு பற்றி சங்க இலக்கியங்கள் தகவல்கள் தருகின்றன. இவ்வழிபாடு பின்னர் வைதீக நெறிமுறையின் பால் ஈர்க்கப்பட்டு வளர்ச்சி பெற்றுச் சென்றமையைக் காணலாம்.

கி. பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து இந்துநாகரிகம் அடைந்திருந்த புதிய பரிணாமத்தினை பின்வருமாறு வகுத்துக்கூறலாம்: அவையாவன :

1. லிங்கக்குறி – யோனிப்பண்பாடு (Fertility Cults) வழிபாட்டு முறையாக மாற்றியமைக்கப்பட்டது. அவை முறையே புருஷ பிரகிருதிக்கோட்பாடாக அல்லது விதியாக மக்கள் சமய வாழ்வில் இடம்பெற்றமை. குடிமல்லத்தில் கிடைத்த சிவ லிங்கம் இதற்குச் சிறந்த சான்று. (பிற்காலத்தில் கயூரோஹோச் சிற்பங்கள் அக்கோட்பாட்டினை விளக்கி நிற்கின்றன)

2. கருவளக் கோட்பாடு (Empryonic Cult) முதன் முதலாக வணக்கத்துக்குரிய பெண்தெய்வங்களாக ஆக்கப்பட்ட நிகழ்வு சாக்த வழிபாட்டு முறைக்கான தொல்லியற் தடயங்கள் கிடைக்கப்பெற்ற காலம். சாஞ்சிதோரணவாயில் கஜலக்ஷ்மியின் உருவ அமைதி இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

3. இனக்குழுக்கள் பலவற்றிலும் (Tribal Beliefs) நம்பிக்கைகள் நிவேதிக்கும் முறைகளும் இக்காலகட்டத்திலிருந்தே பிரதான மத நீரோட்டத்துடன் இணைந்து அரசியல் ரீதியானதும், மத நிறுவன ரீதியானதுமான அந்தஸ்தினைப் பெற்றுக் கொண்டமையைக் காண்கின்றோம். உதாரணமாக பாம்பர்குழுவினரின் நம்பிக்கைகளும் நிவேதிக்கும் முறைகளும் நாகர் / நாகவழிபாட்டு மரபாக இந்துமதத்துடன் சங்கமிக்கின்ற நிகழ்வினைக் காணலாம். விஷ்ணு அவதாரக் கோட்பாட்டுடனும், சாக்த மரபுடனும் நாகமரபுகள் மிகவும் இலகுவாக சங்கமமாயிற்று. இம்மரபே தொடர்ந்து அடுத்து வந்த அரச வம்சபாரம்பரியங்கள் யாவற்றிலும் ஒன்றிணைந்து விடுவதனையும் காண்கின்றோம். கிறீஸ்தவ சகாப்தத்தின் முதன் மூன்று நூற்றாண்டுகளுக்குமுரிய சங்க இலக்கிய மரபில் நாகமரபுகள் கலந்துவிட்டமையை சிறப்பான உதாரணங்களாக நாம் கொள்ளமுடியும்.

4. புராண - இதிகாசக் கருத்தோவியங்களுக்கு முதன் முறையாகச் சமயச்சாயம் தீட்டப்படுகின்ற நிகழ்வின் ஆரம்பம். மக்கள் வாழ்வுடனும், பாரம்பரியத்துடனும் அக்கருத்துக்கள் இணைவுபெற வைத்த நிகழ்வுகள் கிறீஸ்தவ சகாப்தத்

திற்குப் பின்னரே நடந்தேறின. உதாரணமாக, அக்கினி புராணம், மட்சயர் புராணம், கருடபுராணம் போன்றவற்றில் சொல்லப்பட்ட அவதாரக் கதைகள் பற்றிய வடிவங்கள் மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் திருத்தியமைக்கப்பட்டு கோவில்களில் காட்சிப்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்ட காலம் இதுவாகும். பெஸ் நகரில் காணப்பட்ட வாசுதேவன் கோவிலும், கருடத்தூண் சாதனமும் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

5, நரபலி இட்டு தெய்வத்தினை நிவேதிக்கும் புராதன – குழும மரபுகளுக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டு அதற்கான பிரதியீட்டுச் சடங்குமுறைகள் இந்து மதத்தில் தோற்றுவிக்கப்பட்ட காலம் இதுவாகும். ஆகம மரபு அல்லாத நெறியிலேயே நரபலியை, தெய்வத்தினை நிவேத்திக்கும் ஒரு முறையாக மக்கள் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியிலேயே கபாலகம் – காபாலீஸ்வரர் போன்ற வடிவங்கள் தோற்றம் பெற்றிருந்தன எனலாம். மகாயானப் பௌத்தக் கோட்பாடு பரவியதன் பின்னணியில் அப்புராதன வழக்கம் கைவிடப்பட்டு புதிய வழிபாட்டு முறைகள் இந்துமதத்தில் இணைக்கப்பட இப்புதிய சமூக – பொருளாதார, சமூக இயக்கத்தின் எழுச்சியே காரணியாகியது. சிவவழிபாட்டிலும் சிவ கணங்களுடனுமே மிகக்கூடுதலாக காபாலிகர் வழிபாடும், கபாலமும் இணைக்கப்பட்டிருந்தது. தென் – கிழக்காசிய நாடுகளில் இத்தோனேசியாவிலும் பிள்ளையார் மரபுடனும் அது இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கெல்லாம கூடவே மகாயானப் பௌத்தக் கோட்பாடு பரவி இந்துமததத்தின் அதிதிவிரப் போக்கினைக் கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்திருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்துநாகரிகம் கடல் கடந்த நாடுகளில் பிரவாகிக்கத தொடங்கிய காலத்திலிருந்தே கூடவே மகாயானவாழ்வு முறையும் கடல் கடந்து அவ்வவ் நாடுகளில் அரசவைச் செல்வாக்கினைப் பெற்றமையைக் காண்கின்றோம். சீனா – யப்பான் – கொரியா – தாய்லாந்து என்பவை அக்கருத்தினை இன்றும் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

6. பிராந்திய ரீதியான இந்துநாகரிகத்தின் தனித்துவத்தினை அடையாளம் காண்பதற்குரிய காலபகுப்பு கி. பி. 1ம நூற்றாண்டிலிருந்தே ஆரம்பமாகின்றது. கடல் கடந்த நாடுகளிலேயே முதலில் இந்நிலை உருவாகின்றமையை நாம் அவதானிக்க வேண்டும். இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்க்க ( ஆதாம் மலை என அழைக்கப்படுவதற்கு முன்

னர்) சிவபூமி என அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இந்தோனேசியா கணபதி வழிபாட்டிற்குரிய காணபத்திய நாடு எனவும் யாவா பிக்குணிகள் நாடு எனவும் இலக்கியங் களினூடாக அடையாளம் காட்டப்பட்டமையைக் காண் கின்றோம். மணிமேகலையில் நாகநாடு என்று குறிப்பிடப் பட்டது யாவாத்தீவாகும் என்பது அண்மைக்காலக் கருத் தோட்டமாகும்.

## தென்னாட்டு இந்துநாகரிகத்தின் சிறப்பியல்புகள்:

தென்னாட்டு இந்துநாகரிகத்தின் சிறப்பியல்புகள் வட நாட் டினைவிட தனித்துவமானதாகவே அமைந்தது எனின் அதுமிகை யாகாது. இதற்குக் காரணம் தென்னாட்டின் தனித்வமான புவியியற் சூழ்நிலைகளே ஆகும். இந்துநாகரிகத்தின் பல அம் சங்கள் ஸ்லாமியப் பரவலின் விளைவாகவும் முஸ்லிம் ஆதிக்கவா தத்தின் விளைவாலும் பாதிப்புறாது பாதுகாக்கப்பட்ட நிலை தென்னாட்டிலேயே நிகழ்ந்தது. கி. பி. 1206ம் ஆண்டிலிருந்து கி. பி. 1526ம் ஆண்டுவரையில் டெல்கி சுல்தானியத்தின் கீழ் இந்துநாகரிகம் பல தாக்கங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்த சூழ்நிலைகளிலெல்லாம் தென்னாடே அந்நாகரிகத்தின் பாது காப்பிற்கும் புத்துயிர்ப்பிற்குமான சூழலை வழங்கியது. மேற்குத் தக்கணத்தில் பாமினி இராச்சியமும் மத்திய தக்கணத்தில் விஜய நகரப் பேரரசும் இந்து நாகரிகத்தினை அழிவினின்றும் பாதுகாக்க வேண்டியிருந்த பொறுப்பினைப் பெற்றுக் கொண்டிருந்தன. கூடவே சமுத்திரவியற் பண்பாட்டின் உச்ச வளர்ச்சியில் இந்து நாகரிகத்தினை முனைப்பு அடையச் செய்யப்பட்ட காலப்பகுதி யாகவும் விஜயநகரப் பேரரசுக் காலம் அமைந்தது. முதன் முறையாக (இந்துநாகரிகம் வளர்ச்சி அடைந்த நிலையில்) (Fortified Courtyard) அரண் அமைக்கப்பட்ட அரண்மனை சூழலில் இந்துசமயப் பண்பாடு வளர்த்தெடுக்கப்படவேண்டிய சூழல் இக்காலத்தில் தென்னாட்டில் காணப்பட்டது. இந்நிலை யின் பின்னணியின் தென்பாண்டிநாட்டுப் பரப்பில் மதுரைநாயக்க மன்னர்களும் அவர்களுக்குக் கீழ் சேதுபதிகள் போன்ற திறைய ரசர்களும் அவர்களுடைய பாதுகாப்பு நிலையில் யாழ்ப்பாணத் தில் சிங்கையாரியச் சக்கரவர்த்திகளும் இந்துபபண்பாட்டினை வளர்த்தெடுத்திருந்தனர். முன்னர் – பல்லவ – சோழர் – பாண் டியர் காலபக்திப் பிரவாகப்பின்னணியில் விஜயநகரப் பேரர சர் இத்துப்பண்பாட்டின் அதீத உச்ச வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு உழைத்திருந்தனர் என்பதனை நாயக்கர் காலச் செப் பேடுகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. யாழ்ப்பாணத்தில் கிடைத்த கல்வியங்காட்டுச் செப்பேடும் அந்நிலையை இங்கு உறுதி படுத்துவதாக அமைந்துள்ளது.

**முடிவுரை :**

இந்துநாகரிகம் - வரலாற்று நோக்கு என்ற இவ்வாய்வுக் கட்டுரையின் கண் இந்துநாகரிகம் பற்றிய தோற்றம் - வளர்ச்சி பற்றிய ஒரு பரந்த நோக்கில் ( A Bird's Eye Veiw ) அணுகப்பட்டுள்ளது. இங்கு விக்கிரக ஹக் கலைபற்றியோ கோயிற் கட்டிடக்கலை பற்றியோ அல்லது சடங்கு சம்பிரதாயங்கள் பற்றியோ யாதேனும் விடயங்கள் கூறப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்துநாகரிகம் - ஒரு பன்முகப்பார்வை என்ற நோக்கில் இக்கருத்தரங்கு நடாத்தப்படுவதினாலும் ஆய்வாளருக்கு ஆய்வாளரிடையே கூறியதையே திரும்பக் கூறல் என்ற தவறு இடம்பெறாதிருப்பதற்காகவுமே இந்து நாகரிகம் பற்றிய வரலாற்று நோக்கு இவ்வாறு தனித்துவமான முறையில் நோக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையானது நிச்சயமாக ஆய்வாளரின் கவனத்தை ஈர்க்கும் எனக் கருதுகின்றேன். மேலும் இந்த ஆய்வு பற்றிய அணுகுமுறை சீர்திருத்தப் படுவதற்கு புலமையாளரிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களையும் சிந்தனைகளையும் கட்டுரையாசிரியர் வரவேற்கின்றார்.

**நன்றி**

**உசாத்துணை நூல்கள் :**

1. Jayaswal, K. P. 1988, **Hindu Polity** New Dehi.
2. Thapar, Romila, 1984, **Form Lineage to State** Bombay.
3. Luniya, B. 1987, **Evolution of Indian Culture,** Agra.
4. Xavier, Fr. 1977, **The Land of Letters,** Jaffna.
5. Basham, A. L. 1980, **A Cultural History India.** New Delhi.

## தேற்றம்

உடம்பே மறைவது உயிர்க்கிறப் பெண்ப
தொன்று மில்லை
திடம்பெறு மெய்ஞ்ஞானம் கண்டு கொண்டார்
தேர்ந்த தி::தே
இடனாக எம்முடன் கூடி வாழ்ந்தவர்
ஏகினாரால்
கடன் பலவாகப் போமுயிர் நற்கதி
கருதிச் செய்ம்மின்!

குடம்பை தனித்து ஒளியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு

உ

# நன்றி நவில்கின்றோம்

திருவாளர் வேலுப்பிள்ளை சின்னத்துரை அவர்களின் மரணச் செய்தி கேட்டதும் அன்னாரது இல்லத்திற்கு ஓடோடிவந்து எமது துயரில் தாமும் பங்கு கொண்ட உறவினர்கள், அயலவர்களுக் கும், அன்னாரது அபரக்கிரியைகளின் போது தாமே முன்னின்று, அக்கிரியை முறைகளைச் சிறப்பாக நடாத்தி வைத்த எமது மதிப்புக்குரிய பெரியவர்களுக்கும், பத்திரி கைகளில் கண்ணீரஞ்சலியுட்பட அன்னாரது மரணச் செய்தியைப் பொறிப்பதற்கு உதவிய எம் நண் பர்கள் அனைவருக்கும், மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்திய கல்வி நிறுவனங் களுக்கும், கடிதங்கள் மூலமும் நேரடியாகவும் அனுதாபச் செய்தியைத் தெரிவித்த நண்பர்களுக்கும், அன்னாரது அந்தி யேட்டிக் கிரியையில் பங்கு கெண்டு சபையைச்சிறப்பித்த உறவினர்கள் அயலவர்கள், பெரியோர்கள், சமூகசேவையாளர்கள், கல்விச் சிந்தனையாளர்கள் மற்றும் எம் நண்பர்கள் யாபேருக் கும் எமது மனமார்ந்த **நன்றியறிதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

வளர்க மனிதநேயம் !
உய்க மானிடவர்க்கம் !!

நன்றி.

இங்ஙனம்
குடும்பத்தினர் சார்பாக
**செ. கிருஷ்ணராசா**

கோண்டாவில் — மேற்கு
கோண்டாவில்.
25-11-2001

## வம்சாவளி

முத்ததம்பி + செல்லம்மா (?) — வேலுப்பிள்ளை

+ — இராஜம்மா

வேலுப்பிள்ளை + இராஜம்மா

- தங்கம்மா + பொன்னையா
- இராசையா + விசாலாட்சி
- சுப்பிரமணியம் + திரவியம்
- சின்னத்துரை + பூபதி

| மக்கள் | மருமக்கள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|
| **தில்லிமலர் (ஜெயா)** (மைசூர்) | **பேராசிரியர் பொ. இரகுபதி** (ஒறிசா மாநிலம்) | **இனியன் இளங்கோ** (மைசூர்ப் பல்கலைக்கழகம்) |
| **சிவகுமாரி (ரதி)** (ஆசிரியர்) | **செ. கிருஷ்ணராஜா** (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) | **பிறைநிலா** (யா/கோண்டாவில் இந்து ம. வி.) |
| **சிவசந்திரராஜன்** (கணனிக் கற்கை நெறி பிரான்ஸ்) | — | — |
| **ஜெயதாஸ்** (பிரான்ஸ்) | **மதுரைவாணி** (பிரான்ஸ்) | **ஜெயமதுரன்** (பிரான்ஸ்) |
| **ஜெயானந்தி** (சமூக சேவைகள் திணைக்களம், பம்பலப்பிட்டி) | **ஜெகதீஸ்வரன்** (இலங்கை விஞ்ஞான-தொழினுட்பத் திணைக்களம், கொழும்பு.) | — |

திருமகள்
அழுத்தகம்,
சுன்னாகம்.